

Lifeline மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No2 Pages 4 Sunday, 02 March 2008 Free Copy

13 வருடங்களின் பின்னர் இடம்பெறப் போகும் தேர்தலும் இடம்பெயர்ந்த மக்களின் நிலையும்

தொடர்ச்சியான இடம்பெயர்வுகள் மற்றும் இயற்கையின் இடையற்ற தாக்கங்கள் என தொடர்ந்து இன்னல்களுக்கு முகம் கொடுத்து வரும் மட்டக்களப்பு மாவட்டம் 13 வருடங்களின் பின் உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றை சந்திப்பதற்கு தன்னை தயார் படுத்தி வருகின்றது

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பணிகள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்ற போதிலும் ஏறத்தாழ இருப்பத்தையாயிரம் பேர் இன்னமும் இடம்பெயர்ந்த நிலையில் அங்கு வாழ்ந்து வருவதாக மாவட்ட அரசாங்க அதிபரின் தகவல்களை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று சுட்டிக் காட்டியுள்ளது

இடம்பெயர்ந்த மக்களும் இந்த தேர்தலில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் சந்தரம் அருமைநாயகம் குறிப்பிட்டுள்ளார்

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் அரசாங்க அதிபரை எமது குழுவினர் சந்தித்துக்கலந்துரையாடியிருந்தனர்.

இந்த சந்திப்பின் போது இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பாக ஏற்கனவே உள்ளூராட்சி அதிகாரசபை சட்டத்தின் கீழ் தேர்தல் ஆணையாளருடைய வேண்டுகோளின் பிரகாரம் ஒரு விஷேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்திருந்தார்

இடம்பெயர்ந்தவர்கள் அவர்கள் தற்போது இடம்பெயர்ந்து வாழ்கின்ற பிரதேசங்களில் ஏற்படுத்தப்படவுள்ள விஷேட வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க

இன்னல்களுக்கு மத்தியில் வாழும் மக்கள் மேலும் கஷ்டங்களுக்கு முகம் கொடுப்பதை ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது.

வசதி செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு அவர்களின் பிரதேச செயலாளர் மற்றும் கிராம சேவகர்கள் மூலமாக அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் இடம்பெயர்ந்துள்ள மக்களால் பூர்த்தி செய்யப்பட்டு தேர்தல் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதனை அடுத்து அவர்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் எவை என்பது தொடர்பான விடயங்கள் தற்பொழுது மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை மீள்குடியேற்றப்பட்டு வரும் மக்களுக்கான அடிப்படைத்தேவைகளை அரசாங்கம் மீள் குடியேற்ற அமைச்சின் ஊடாக வழங்கி வருவதாகக் குறிப்பிட்ட அவர் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்பாகவே அவர்களின் பிரதேசங்கள் குடியிருப்பதற்கான இயல்பு நிலைக்கு மாற்றியமைக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

மீள்குடியேறிய மக்களுக்கான உணவுத் தேவைகள் உலக உணவுத் திட்டத்தின் மூலமாகவும் அவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்குத்தேவையான உபகரணங்கள்,விதை நெல், உரம் போன்றவைகளும் மீனவர்களுக்குத்தேவையான மீன்பிடி உபகரணங்கள் மற்றும் வள்ளங்களுக்கான உதவிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் விவசாயத் திணைக்களத்தால் வழங்கப்படுவதாகவும் அரசாங்க அதிபர் சுட்டிக்காட்டினார்.



சுந்தரம் அருமையநாயகம்

இன்னல்கள் மத்தியில் வாழும் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு மேலும் இன்னல்கள் ஏற்பவடுதை அனுமதிக்க முடியாதென்றும் அந்த மக்களின் வாழ்வாதாரங்களை மீளக் கட்டியெழுப்பி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான அனைத்து முன்னெடுப்புக்களையும் மேற்கொள்வதே தனது ஒரே நோக்கம் என்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நம்பிக்கை வெளியிட்டார்.



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 9.45 முதல் 10.15 வரையும் புத்தளம் பிரதேசத்தில் அநூர் எப்.எம்.(FM 96.1 Mhz) வானொலி ஊடாக ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 முதல் 7.15 வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர்களுக்காக வும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயல்த்திட்ட அமைப்புக்களின் ஒரு அங்கமாகும். மீண்டும் வாழ்வோம் செயல்த்திட்டமானது அரசாங்கம் மற்றும் சர்வதேச/ உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனையோர் இடம்பெயர்ந்த மக்களுக்காக ஆற்றும் செயற்பாடுகள், தகவல்கள் குறித்த சரியான செய்தியினை வெளியிடுவதுடன் மிக முக்கியமாக அவர்கள் எவ்வாறு இவற்றை பெற்றுக் கொள்ளலாம், எவ்வாறு நன்மையடையலாம் போன்ற சேவைகளை வழங்குகின்றது.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
மின்அஞ்சல்: info@lifelinesrilanka.com

சுவடுகள்

✸ அரச மற்றும் மனிதாபிமான அமைப்புகளின் கூட்டமைப்பின் (IASC, அரசாங்கம் மற்றும் மனிதாபிமான அமைப்புக்களின் வலையமைப்பு) நடப்பு அறிக்கையின் (இல.114 14-21 பெப்ரவரி 2008)படி கிராம சேவையாளர்களால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் உள்வாரியான **இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை** 262,098 ஆகும்.

✸ **உலக உணவு ஸ்தாபனத்தின்** (WFP) தாய் சேய் சுகாதார மற்றும் போஷாக்குத் திட்டத்தின் வெளியீட்டில் சீனி மற்றும் எண்ணெய் உட்கொள்ளல் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இத்திட்டமானது மனிதர்களின் கலோரி பெறு மானத்தை அதிகரிப்பதாக அமைந்திருக்கும் இதன் மூலம் பயனடையும் கர்பிணிகள், ஊட்டச்சத்து இல்லாத தாய்மார் மற்றும் ஐந்து வயதிற்கு குறைந்த சிறுவர்களுக்கு மாதத்திற்கு 300கிராம் சீனி மற்றும் 450 கிராம் எண்ணெய்ச்சத்து கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✸ பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி **திருகோணமலை** யின் ஓர் மீள்குடியேற்ற முகாமில் அரசாங்க அதிபரினால் நடாத்தப்பட்ட கூட்டத்தில் மயிலவெட்டுவான் மற்றும் செங்கலடி பிரதேசங்களில் மீளக்குடியேறும் நடவடிக்கைகள் இடம்பெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களை அடுத்து மார்ச் 10ஆம் திகதிக்கு பின்னர் இவ்மீள்குடியேற்றங்கள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மீள்குடியேறியவர்கள் மீண்டும் இடம்பெயர்வதை விரும்பாத போதும் அவர்கள் மயிலவெட்டுவான் அகதி முகாம்களுக்கு சென்று நிலைமைகளை பார்வையிட அரசாங்கம் ஒழுங்குகளை செய்து கொடுத்துள்ளது.

பேசும் படம்



மன்னாரின் ஒரு ஓரத்தில் இருப்பதே தலைமன்னார். 20 வருடங்களுக்கு முன்னர் இலங்கையர்கள் இங்கிருந்து இந்தியாவிற்கு கடைகளுக்கும் திரைப்படம் பார்ப்பதற்கும் சென்று வந்தனர். தற்பொழுது இங்கே மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள சில குடும்பங்களே உள்ளன.

மீண்டும் வாழ்வோம் தொடர்பான உங்கள் எண்ணங்களையும் ஆக்கங்களையும் எங்களுடன் பகிர்ந்து கொள்ள

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
மின்அஞ்சல்: info@lifelinesrilanka.com

இன்னல்களுக்கு மத்தியிலும் கல்வியில் எதிர்நீச்சல் போடும் திருகோணமலை மாவட்டம்

அசாதாரண சூழ்நிலைகளால் ஏற்படும் இடம்பெயர்வுகள் மாணவர்களுக்கு பல சிரமங்களை கொடுக்கின்றது. கிழக்கு மாகாணத்தில் மட்டும் 18 இடம்பெயர் முகாம்களில் 5000ற்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளது. குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் 4 இடம்பெயர் முகாம்களில் 1100 மாணவர்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. மாணவர்கள் பல இன்னல்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது என Save the Children அமைப்பின் மட்டக்களப்பு இணைப்பாளர் ஜூலியன் செல்லப்பா தெரிவித்துள்ளார்.

கல்வியில் ஏற்படும் சிரமங்களை குறைப்பதற்காக கல்வித் திணைக்களம் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து கல்வி இணைப்புக்குழுக்களை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார் பிரதி கல்விப் பணிப்பாளர் லோகராஜ்.

இப்பிரதேச மாணவர்கள் இதுவரை இலவச சீருடைகள், சப்பாத்துகள், பாடசாலை உபகரணங்கள் என்பவற்றை இலவசமாக பெற்று பயனடைந்துள்ளார்கள். எந்த இடத்தில் தேவைகள் உள்ளதோ அவை திணைக்களம் மூலம் அறியப்பட்டு தேவையேற்பின் NGOக்களின் உதவியும் பெறப்பட்டு குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அக்குழுக்கள் திணைக்கள தொழில்நுட்ப அதிகாரிகளினால் மேற்பார்வை செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. UNICEF, World Vision, Save the Children மற்றும் சர்வோதயம் ஆகிய அமைப்புக்கள் மாணவர்களின் நலனில் பல்வேறு முன்னெடுப்புக்களை கல்வித்திணைக்களத் துடன் இணைந்து மேற்கொள்கின்றனர். சர்வோதய அமைப்பின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் ஜீவராஜ் தமது அமைப்பின் நடவடிக்கைகள் பற்றி குறிப்பிடுகையில் டயலொக் நிறுவனத்தின் உதவியோடு பாட சாலைக்கு செல்லுகின்ற சிறுவர்கள், மாணவர்களுக்கு ஏறத்தாழ 1500 பேரிற்கு டயலொக்கின் புத்தக பைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அதாவது மெதுவாக கற்கின்ற பிள்ளைகளுக்கு மாலை நேர வகுப்புகளை வைத்து அவர்களை ஊக்குவிக்கும் ஒரு முறையை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருவதாக அவ்வமைப்பின் மட்டக்களப்பு இணைப்பாளர் ஜீலியன் செல்லப்பா தெரிவிக்கின்றார்.



பாடசாலை முடிந்து அகதிமுகாம் திரும்பும் சிறுவர்கள்

18 இடம்பெயர் முகாம்களில் 5000ற்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளது

கற்றல் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல் பாதுகாப்பு விடயங்கள் குறித்த கருத்துகளுக்கு Save the Children அமைப்புடன் எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு விலாசம்: சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் 43, Station Road, மட்டக்களப்பு. இன்னல்கள் இருப்பினும் அவற்றை தீர்க்க எதிர்நீச்சல் புரிதல் வேண்டும். மாணவர்கள் தமது எதிர்காலத்தை வளப்படுத்த சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

வாழ்வின் வர்ணங்கள்

விறகு வெட்டி, அதனை விற்று தன் வாழ்க்கையை கொண்டு செல்லும் கூலித்தொழிலாளி ஒருவரின் வாழ்க்கை 'வாழ்வின் வர்ணமாக' இங்கு தரப்படுகின்றது.

24 வயதான இவரின் பெயர் **போசன்**. சொந்த இடமான பப்பட்டா பிரதேசத்தில் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டு வந்த இவர் தற் பொழுது இடம்பெயர்ந்து அகதி முகாமில் வாழ் ந்து வருகிறார். தொழில் வருமானம் காலத்தின் தேவை. தனது குடும்பத்தை பராமரிப்பதற்காக விறகு வெட்டும் தொழிலை மேற்கொண்டு வரு கின்றார். இந்த தொழிலின் மூலம் ஒரு நாளைக்கு 500 ரூபாவே அவருக்கு வருமான மாக கிடைக்கின்றது. இதைக்கொண்டே தனது குடும்ப செலவுகளை சமாளித்து வருகிறார். காலை 6.00 மணிக்கு தொழிலுக்குச் செல்லும் இவர் மாலை 5.00 மணிக்கே முகாமிற்கு திரும்புகின்றார். இதற்கு தூரமும் ஒரு காரணம். சுமார் 10கி.மீ தூரம் சென்றே விறகு தேட வேண்டிய சூழ்நிலை உள்ளது.



திருமணமாகி ஒரு குழந்தைக்கு தந்தையாய் உள்ள இவரது குடும்பம் பல சிரமங்களுக்கு மத்தியில் வாழ்க் கையை நடத்தி வருகின்றது.

சாளரம்

இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் தங்கியிருப்போர் பிறப்புச் சான்றிதழ்களை பெறுவதற்கான வழிமுறைகள் பற்றி இலங்கை அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிலைப்பாடுகள்:

இடம்பெயர்ந்தவர்கள் எவ்வாறு பிறப்புச் சான்றிதழ்களை பெறமுடியும்?

அவர்கள் இடம்பெயர்ந்துள்ள பிரதேசங்களைச் சேர்ந்த பிரதேச செயலகங்களில் உரிய ஆவணங்களை முன்வைத்து பதிவுசெய்யலாம்.

இடம்பெயர் முகாமிலேயே பிரசவம் நிகழ்ந்தால். எவ்வாறு பதிவினை மேற்கொள்ளலாம்?

பிரசவம் நடந்த அகதி முகாம் இருக்கக்கூடிய பிரதேச கிராம சேவகர் வழங்கும் பதிவு சீட்டினையும் விபரங்களையும் சமர்பித்து ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

பிறப்பு சான்றிதழ்களை தொலைத்தவர்கள் எவ்வாறு அவற்றை மீளப்பெற்று கொள்ளலாம்?

கொழும்பு மாளிகாவத்தையில் உள்ள பிறப்பு பதிவுகள் திணைக்களத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத் தினுடைய நகல் அல்லது பதிவு எண்ணை சமர்பித்து ஒரு நாள் சேவையின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும். இல்லாத சந்தர்ப்பத்தில் ஆண்டையும் இடத்தையும் குறிப்பிட்டு பெறலாம்.

இலங்கை தகவல் திணைக்களம் எவ்வாறு பிறப்பு அத்தாட்சி பத்திரத்தை பெறுவது என பகிர்கின்றது.

வடக்கு கிழக்கிலே வாழ்பவர்கள் கொழும்பில் வந்துதான் அதனை பெற்றுக்கொள்ளவேண்டுமா?

இடம்பெயர்ந்து இருந்தால் கொழும்பிலே எடுக்கலாம். அல்லது வடக்கு கிழக்கிற்கு அன்மையாக இருந்து பிறந்த இடத்திற்கு போக முடியுமான சந்தர்ப்பங்கள் இருக்கும் என்றால் பிறந்த இடத்திற்கு உரிய பிரதேச செயலக காரியாலயத்தில் B63 விண்ணப்பப்படிவத்தை பெற்று பிறப்பு அத்தாட்சிப்பத்திர எண் அல்லது ஆண்டை குறிப்பிட்டு 25 ரூபா முத்திரை கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். விபரம் இல்லாத பட்சத்திலே 50ரூபா முத்திரை கட்டணம் செலுத்தி அதை அவர்கள் பிறந்த இடத்திற்குரிய பிரதேச செயலாளர் காரியாலயத்தில் இருக்கக்கூடிய பிறப்பு அத்தாட்சி அலுவலர் பிரிவில் ஒப்படைத்து ஒரே நாளில் பெற்றுக்கொள்ளலாம்.



மாணவர்களின் கல்வியில் தடம்பதிக்கும் முன்பள்ளிகள்

அரசாங்க அதிபர் அலுவலகம் அறிவிப்பின் படி வவுனியா மாவட்டத்தில் 10,500ற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இம்மாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள சிறார்களின் கல்விச் செயற்பாடுகளில் முன்பள்ளிகள் முக்கிய பங்களிப்பு ஆற்றி வருகின்றன.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரிற்கு 10கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மீள்குடியேற்றக் கிராமமான சுந்தரபுரத்தில் காணப்படும் சர்வசக்தி முன்பள்ளி பல சேவைகளை ஆற்றி வருகின்றது. 5 வருடங்களுக்கு முன்னர் கல்வி கற்ற மாணவர்களின் நிலைப்பாட்டிற்கும் தற்பொழுது உள்ள மாணவர்களுக்கும் பாரிய வித்தியாசம் உள்ளதாக இப்பள்ளியில் கடந்த 7 வருடங்களாக பணியாற்றி வரும் 28வயதான இரத்தின வேல் சுபாஜினி தெரிவிக்கின்றார்.

1997ஆம் ஆண்டு நிலவிய யுத்த சூழ்நிலை யினால் வன்னி மாவட்டத்தின் புளியங்குளம் நெடுங்கேணி ஆகிய பிரதேசங்களிலிருந்து வெளியேறிய மக்கள் தட்சிணா மருதமடுவிற்கும் பின்னர் 1999இல் வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்திற்கும் இடம்பெயர்ந்து பின்னர் 2001ஆம் ஆண்டு சுந்தரபுரத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் உள்ள சிறார்களின் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சொலிடார் எனப்படும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் கரையோரம் உட்பட நாடு பூராவும் தற்போது மனிதாபிமான பணிகளை செயற்படுத்தி வருகின்றது. bø' எனப்படும் அதன் குறுகிய கால வேலைத்திட்டத்தின் கீழ் மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

மக்கள் சொலிடா ரிடம் இருந்து நிறைய



ரட்ணசிங்கம் சுபாஜினி நிமல்ராஜ் யோகநந்தினி

எதிர்பார்ப்பதாக அந்நிறுவனத்தின் சிரேஷ்ட தொழில் நுட்பக் கண் காணிப் பாளர் சுப்ரமணியம் நவரட்ணம் தெரிவித்துள்ளார். உட்கட்டமைப்பு வசதிகள் குறைவு. பிள்ளைகள் படிப்பதற்கான இட வசதிகள் குறைவு எனப் பல பிரச்சினைகள் இங்கு காணப்படுகின்றன. முன்பள்ளிகள் அமைத்துக் கொடுத்த தன் பின்னர் பிரச்சினைகள் குறைவாக இருப்பதுடன் மக்கள் எதையென்றாலும் தாமே முன் வந்து செய்யக்கூடிய நிலையில் இருக்கின்றார்கள் என தெரிவிக்கின்றார் முன்பள்ளி ஆசிரியை திருமதி இரட்ணசிங்கம் சுபாஜினி.



வவுனியாவில் SOLIDAR அனுசரணையில் இயங்கும் முன்பள்ளி ஒன்றின் வகுப்பறை

ஓரளவிற்கு பிரச்சினைகளில் இருந்து மீண்ட போதிலும் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற இவர்களுகு இலவசமாக சீருடை, புத்தகங்கள், மதிய உணவு என அநேகமாக எல்லாம் வழங்கி இருந்தாலும் வீட்டிலே அவர்களுக்கான போஷாக்கான உணவு வழங்கப்படுவதில்லை என தெரிவிக்கின்றார் வவுனியா வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. ஏ.சு.யு.ஒஸ்வேல்ட்.

கிராமத்தில் வாழும் இப்பிள்ளைகள். வருங்காலத்தில் நல்ல ஒரு நிலைமைக்கு வரவேண்டும் என இப்பள்ளியின் ஆசிரியர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். இவ்வாசிரியர்களுக்கு மாதத்துக்கு ஒரு முறை பயிற்சி வகுப்பு நடைபெறுகின்றது. அந்த பயிற்சி வகுப்புகளின் மூலம் எப்படி கல்விச் செயற்பாட்டை செய்யவேண்டும் என்ற விஷேட அறிவு வழங்கப்படுகின்றது. பயிற்சி வகுப்புகள் தமது மனநிலையை சரியாக்கிக்கொண்டு எப்படி பிள்ளைகளை கற்பிக்கலாம் என்ற திடத்தை வழங்குவதாக ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

மீளகுடியமர்த்தப்பட்ட மக்களுக்கும் இடம்பெயர்ந்தவர்களுக்கும் எதிர்காலத்தில் செய்வதற்கான திட்டங்களை சொலிடார் தயாரித்துள்ளது. அந்த நிறுவனத்தின் கடந்தகாலத் திட்டங்கள் வெற்றியளித்துள்ளன என்று கூறியுள்ள சிரேஷ்ட தொழில்நுட்பக் கண்காணிப்பாளர் சுப்ரமணியம் நவரட்னம் வரும் 2 மாதங்களில் கிராமங்களைத் தெரிவு செய்து எவ்வாறான தொழில்நுட்ப உதவிகளை செய்ய முடியும் என்று ஆலோசிக்க இருப்பதாகவும் இவ்வாறான முன்பள்ளித் திட்டங்கள் போன்று ஏனைய திட்டங்களும் வெற்றியளிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளர்.

அறிவோம் தெரிவோம்

இந்தப்பகுதி மூலம் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் தொடர்பான தகவல்கள் இடம்பெறவுள்ளன.

சமவாயம் எனப்படுவது சர்வதேச சட்டத்தினால் ஆளப்படும் அரசுகளுக்கிடையே ஆக்கப்பட்டுள்ள எழுத்து வடிவிலான சர்வதேச உடன்படிக்கையாகும். ஒரு குறிப்பிட்ட ஒரு சமவாயத்தை ஒப்பமிட்டு ஏற்றுக்கொள்ளும் அரசுகள் யாவும் சர்வதேச சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் யாவுக்கும் சட்டப்படி கட்டுப்பட்டுள்ளன. பிள்ளைகள் யாவரும் தனிநபர் என்ற முறையில் உரித்துடைய மனித உரிமைகளே சிறுவர் உரிமைகளாகும். பிள்ளைகளுக்குப் பொறுப்பாக உள்ள மக்களும் அமைப்புகளும் அவர்களை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பதற்காக செய்யவேண்டிய வற்றை சிறுவர் உரிமைகள் உள்ளடக்குகின்றன. சமவாயம் உரிமைகளை மாத்திர மன்றி மற்றவர்களின் உரிமைகளை மதித்து நடப்பதையும் வழியுறுத்துகின்றது.

மனித பிறவிகள் என்ற வகையில் பிள்ளைகளுக்கு வேண்டிய சேம நலன்கள் பாதுகாப்பு என்பவற்றை ஒரு ஆழ்ந்த அகன்ற கோவையாக சமவாயம் ஒன்று சேர்த்துள்ளது.

சமவாயம் பிள்ளைகளின் அவல நிலையை கருத்திற் கொண்டு அரசுகளையும் முதியவர்களையும் ஒன்று சேர்த்து அதன் வழி பிள்ளைகள் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதை உறுதி செய்கிறது. பிள்ளைகளை பாதுகாத்தல் அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளை ஒப்புக் கொடுத்தல் அவர்களின் தேவைகளை மதித்து அவற்றைப்பூர்த்தி செய்தல் என்பன பல்வேறு சமுதாயங்களினால் நீண்டகால மாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை யாகும்.

1998ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம் இல.50 அமுலாக்கப்பட்டது. இதன் பிரகாரம் 18 வயதிற்கு உட்பட்ட யாவரும் பிள்ளைகள் என வரையறுக்கப் பட்டனர். சிறுவர் துஷ்பிரயோகம் என்னும் வரையரைக் குள் பாலியல் நோக்கம் கொண்டவனின் நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது. 14 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள் வீட்டு வேலையாட்களாக வேலைக்கு அமர்த்தப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

14 வயது வரையான பிள்ளைகளுக்கு கட்டாயக்கல்வி அமுல்படுத்தப்பட்டுள்ளது



புத்தளம் மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாமில் வாழும் சிறுவர்கள்

செயல்கள் கடத்தல் பிள்ளைகளுக்கு கொடூரம் இழைத்தல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துதல் அல்லது சட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகள் அல்லது அவர்களது கட்டாயக் கல்வி பற்றிய சட்ட திட்டங்களுக்கு முரணான எந்த விதமான செயல்களும் தண்டனைக்குரியது என்று சட்டம் செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்கு பிள்ளைகளின் கட்டாய வரவு பற்றி 1997ஆம் ஆண்டு தொடக்கம் அமுலாக்கப்பட்ட சட்டம். இது சகல பிள்ளைகளுக்கும் 14 வயது வரை யான கட்டாயக்கல்வியை அமுல்படுத்தியுள்ளது.

பெண்களுக்கான விழிப்புணர்வூட்டல் நடவடிக்கைகளில் ActionAid இன் பங்கு

ActionAid நிறுவனமானது இடம்பெயர்ந்த மக்களின் உளவள தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இடம் பெயர்ந்துள்ள மக்களில் பெண்களுக்கான விழிப்புணர்வு ஊட்டல் நடவடிக்கைகளில் ActionAid இன் பங்கு குறித்து அதன் பெண் ணுரிமை தொடர்பான நிகழ்ச்சி அலுவலர் **கவிதா அருண கிரிநாதனுடன்** இடம்பெற்ற ஒரு செவ்வியின் கண்ணோட்டம்.

அம்பாறை மாவட்டத்தில் இடம் பெயர்ந்துள்ள பெண்களின் மத்தியில் அவர்களின் உரிமைகள் தொடர்பில் விழிப் புணர்வை ஏற் படுத்துவதற்கு எவ்வாறான செயல்திட்டங் களை முன்னெடுத்து வருகிறீர்கள்?

ActionAid மட்டுமல்லாது உள்ளூர் மட்டத்திலும் உள்ள நிறுவனங்களுடன் இணைந்து வலயம் ஒன்று உருவாக்கப்பட் டுள்ளது. ஆங்கிலத்தில் இதை "We Women Against Violence" என்று குறிப்பிடப் படுகிறது. இது முக்கியமாக கிராம மட்டத்தில் இருக்கிற பெண்கள் தலைவிகளை முக்கி யப்படுத்தி அவர்களுக்கு ஊடாக வரும் பிரச்சினைகளுக்கு மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் தீர்வு களை எடுக்க உதவி செய்யப்படுகிறது.

அக்கறையுடன் செவிமடுத்தல் அதாவது 'Active Listening' என்று சொல்லப்படு கின்ற உங்க ளது திட்டம் தொடர்பான ஏதா வது தகவல்களை வழங்க முடியுமா?

ஆம். நிச்சய மாக. இடம் பெயர்ந்து முகாம்களில் வாழ்கின்றவர்களின் கதைகளை கேட்டல். உதாரணத்திற்கு அவர்களுக்கு என்ன பிரச்சினை? என்ன நடந்தது? என்று கேட்ப தற்கு ஒரு ஆதரவாக அதைப்பற்றி கதைப்பதற்கு யாரும் முன்வருவ தில்லை. அந்த கிராமத்தில் நல்ல ஒரு நிலையில் வாழ்ந்திருப் பார்கள். முகாமிற்கு வரும் போது அவர்களுக்கான அந்த ஆதங் கத்தை வெளிப்படுத்திச் சொல்ல யாரும் இருப்பதில்லை. இந்த வேலையில் நாங்கள் அந்த முகாம் களில் இருக்கின்ற அங்கத்தினர் களை அழைத்து எப்படி ஆர்வ மாக செவிமடுக்க வேண்டும் என்ற பயிற்சியை வழங்குகின்றோம். இப்படியான அனர்த்தத்தின் போது



கவிதா அருண கிரிநாதன், ActionAid

அவர்கள் மூலமாகவே அவர்களு டைய சமுதாயத்திற்கு அந்த கிரா மத்தில் இடம்பெயர்ந்த மக்களுக் கான பிரச்சினைகளை தீர்ப்பதற் கான வழிவகைகளை நாங்கள் மேற்கொள்கின்றோம்.

பெண்கள் தங்களுக்குள் அடக்கிக்கொள்ள முடியாத சில விஷயங்களை அவர்கள் சொல்ல முன்வந்து அதற்கான தீர்வுகளை பெற்று இருக்கிறார்கள்.

இந்த 'Active Listening' என்ற செயல்திட்டத்தின் பெறு பேறு என்று எவற்றை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்?

ஒவ்வொரு கிராமத்திலும் இப்படியான இளைஞர்களை நாங்கள் பயிற்றுவிக்கும் போது அது இன்றைக்கு இல்லை நாளைக்கு இல்லை எப்பொழுது அவர்களுக்கு பிரச்சினைகள் வந்தாலும் அதற்குள் இருக்கிற அந்த குழுவானது அதை மீள கட்டியெழுப்பவும் அந்த பிரச்சினையிலிருந்து விடுபடவும் தயார் நிலையில் இருக்கக் கூடியவாறு உருவாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தத் திட்டத்தின் ஊடாக பெண்களுக்கு எவ்வாறான நன்மைகள் கிடைத்திருக்கின்றன என்று நீங்கள் நம்புகிறீர்கள்?

பெண்கள் தங்களுக்குள் அடக் கிக்கொள்ள முடியாத சில விஷ யங்களை அவர்கள் சொல்ல முன் வந்து அதற்கான தீர்வுகளை பெற்று இருக்கிறார்கள். சில பேர் வன்முறை சம்மந்தமாக பாதிக்கப் பட்டு அதையும் அவர்கள் எங்க ளுக்கு சொல்லி அதற்குரிய தீர்வு கள் மேற்கொள்ளப்பட் டிருக்கின்றன. பிறகு அவர்கள் ஆர்வமாக ஏனைய நடவடிக்கை களிலும் உதாரணத்திற்கு முகாமில் இருக்கின்ற நிர்வாக குழுக்களில் அவர்கள் பங்கெடுப்பதற்கு வாய்ப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத் துகின்ற போது நீங்கள் சந்தித்த சில சுவாரஷ்யமான விடயங்களை எங்களோடு பகிர்ந்து கொள்ள முடியுமா?

நான் ஒரு கிராமத்திற்கு விஜயம் செய்த போது அங்கிருந்த ஒரு அம்மா என்னிடம் சொன்ன ஒரு விடயம் 'மகள் இப்படி ஒருத்தரும் வந்து எங்களிடம் ஒரு கதையும் கேட்பதில்லை. அரிசிக்கும் மற்ற சாமான்களுக்கும் சண்டைபிடிக்குறதிலேயே எங்களுடைய பொழுது போகுது. இப்படியான நிகழ்ச்சித் திட்டம் மூலமாக நாங்கள் ஒரு நிம்மதியை காண்கிறோம். எங்களுக்கு ஆறுதலாக ஒருத்தர் எங்கட கதையை கேட்க இருக்கின்றார் என்ற நம்பிக்கையை உருவாக்கி உள்ளீர்கள் என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

மீண்டும் வாழ்வோம் (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS USAID FROM THE AMERICAN PEOPLE

தகவல் பெட்டி

இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிக்கான வழிகாட்டல் கோப்பாடுகள்

சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், இலங்கைச் சட்டம் மற்றும் பிரயோகிக்கப்படக் கூடிய அனைத்து சர்வதேச நியமங்களின் வழிகாட்டல்களின்படி, இலங்கையில் மனிதா பிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளை செயற்திறனுடன் அமும் படுத்துவதற்கு ஏதுவாக பின்வரும் வழிகாட்டல் கோட்பாடுகளை கீழே குறிப்பிடப்பட்ட பையொப்பமிட்டோர் மீள் உறுதிப்படுத்துகின்றனர். இதில் கீழ் கையொப்பமிட்டோர் தங்களது பணியாளர்கள் மற்றும் அவர்களது நடவடிக்கை அமல்படுத்தும் பங்காளர்கள் என்போர் (சர்வதேச/உள்ளூர் அரசசார் பற்ற ஸ்தாபனங்கள், ஐ.நா, செஞ்சிலுவைச் சங்கம் போன்றன) பின்வரும் 10 கோட்பாடுகளை நடைமுறைச் சட்டங்களின் கீழ் இயன்றளவு கடைப்பிடிக்க பெரும் முயற்சி செய்வர்.

1. **மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவியின் குறிக்கோள்:** இலங்கையில் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதில், பங்களிப்பதற்கு நாங்கள் ஒன்றிணைந்து பணியாற்றுகின்றோம். எங்கள் உதவிகள் மக்களின் வேதனைகளை நீக்குதல், வறுமையை ஒழித்தல், இலங்கையின் மோதல் நிலைமைகளுக்கு அமைதியான தீர்வொன்றிற்கு ஆதரவளித்தல் உட்பட சமூகங்கள் தன்னிறைவை அடைய உதவுதல் போன்றவை குறித்துக் கவனம் செலுத்துகின்றன.
2. **பாரபட்சமின்மை:** இடவமைவு, இனம், பால்நிலை, சமூக அந்தஸ்து அல்லது மதம் என்பவற்றைக் கருதாது இனங் காணப்பட்ட தேவைகளின் அடிப்படையில் மட்டுமே நாங்கள் உதவிகளை வழங்குகிறோம்.
3. **பக்கச்சார்பின்மை:** எங்களது உதவிகள், வழங்கல்கள், வாகனங்கள், வசதிகள் அல்லது உபகரணங்கள் என்பன எந்தவொரு இராணுவ, அரசியல் அல்லது பிரி வினை நோக்கங் களுக்காக உபயோகிக்கப்படுவதனை ஏற்றுக் கொள்ளாத துடன் நாங்கள் பக்கச்சார்பின்மையுடன் இருப்போம்.
4. **மனித கௌரவத்தை மதித்தல்:** சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் என்பவற்றுக்கான மதிப்பளித்தலை நாங்கள் வேண்டுகிறோம். நாங் கள் உள்ளூர்ச் சமூகங்கள் வெளிப்படுத்திய விருப்புகளின் விளைவாக பணியாற்றுவதுடன் மக்களது கௌரவம், அவர்களது கலாசாரம், மதம் மற்றும் பாரம்பரியங்களை மதிக்கின்றோம்.
5. **ஒளிவு மறைவின்மை மற்றும் பொறுப்புக் கூறல்:** நாங்கள் உதவ நாடுபவர்களுக்கு நாங்கள் பொறுப்புக் கூற வேண்டிய வர்களாவோம். எங்களது உதவிகள் ஒழிவு மறைவு இல்லாதவை என்பதை நாங்கள் உறுதிப்படுத்துவோம். அபிவிருத்தி அல்லது மனிதாபிமான உதவிகளுக்கான வழங்கல்கள் அல்லது உபகரணங்களில் ஊழல் எதனையும், களவு அல்லது துஷ்பிரயோகங்களை அனுமதிக்கமாட்டோம்.
6. **நிலைத்து நிற்றல் மற்றும் தயார்படுத்தல்:** உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் எங்களது செயற்பாடு களை அமைத்துக் கொள்வதுடன் உள்ளூரில் கிடைக்கும் வளங்களை அதி கரிப்பதையும் இலக்காகக் கொண்டுள்ளோம். சிவில் சமூகங்கள், வர்த்தக சமூகங்கள், உள்ளூர் அதிகார சபைகள் போன்ற உள்ளூர் அமைப்புக்கள், தற்போதைய தேவைகள் குறித்து கவனம் செலுத்த மற்றும் எதிர்கால அவ சர நிலைமைகளைத் தவிர்க்க அல்லது எதிர் கொள்ளத் தயாராவதற்கு வலுவூட்டுகிறோம்.
7. **ஆலோசனை மற்றும் பங்குபற்றல்:** நாங்கள், சமூகங்களை அவர்களது நன்மைகளுக்காக அமுல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைக்க, திட்டமிட, முகாமைத்துவம் செய்ய, நடைமுறைப்படுத்த மற்றும் மதிப்பீடு செய்வதில் அவர்களை ஈடுபடுத்து வதற்கு நாடுகிறோம்.
8. **ஒருங்கிணைத்தல்:** நாங்கள், எங்களது செயற்பாடுகளை அரசாங்கம் மற்றும் தொடர் புடைய அனைத்து அக்கறையாளர்களுடனும் ஒவ்வொரு மட்டத்திலும் ஒருங்கிணைக்கின்றோம்.
9. **வழிவகைகள்:** உதவி தேவைப்படும் அனைத்து மக்களுக்குமான அடிப்படைத் தேவையாக கட்டுப்பாடுகளற்ற வழிவகைகளை நாம் வேண்டிக் கொள்கின்றோம். மனிதாபிமான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஊழியர்களுக்கான அதிகாரத்தை விரைவில் வழங்குவதையும் சங்கப்பகுதியிலிருந்து வெளிக்கொண்டு வருவதையும் நாம் எதிர் பார்க்கின்றோம்.
10. **பாதுகாப்பும், பத்திரமும்:** சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்சிகளிடமும் முகவர் ஸ்தாபனங்கள் மற்றும் அவர்களது ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தை தற் காத்து மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துமாறு வேண்டுகிறோம். ஊழியர் கள் வன்முறை, கடத்தப்படல், தொந்தரவு அல்லது அச்சுறுத்தல்களுக்கு ஆளாகுவதை நாம் அனுமதிக்கமாட்டோம். எங்களது பணிகளுடன் தொடர்புகளற்ற ஆட்கள் அல்லது பொருட்களை போக்குவரத்த செய்வ தற்கு எங்களது வாகனங்கள் உபயோகப்படுத்தப் படல் கூடாது.

எங்களது செயற்பாடுகள் சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் கோட்பாடுகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்- செம்பிறை இயக்கங்க ளது ஒழுக்கக் கோவையுடன் நிலையானதாக இருப்பதை நாம் உறுதிப் படுத்த விரும்புகிறோம். மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து http://www.ifrc.org/publicat/conduct/code.asp உடன் தொடர்பை ஏற் படுத்தவும். இவ்வழிகாட்டல் கோட்பாடுகள் ஓர் சர்வதேச ஒப்பந்தமோ அல்லது சட்டவலுவான ஆவணமோ அல்ல.

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.